# 17-11-2024 செய்தி

## ஊத்தங்கரை சென்னானூர் அகழாய்வு தமிழ் நாகரிகத்தின் மணிமகுடம்

- தமிழ்நாட்டின் புதிய கற்காலப் பண்பாட்டுச் சுவடுகளை ஏந்தி, சிறப்புமிக்க தொல்லியல் தளமாக சென்னானூர் திகழ்கிறது.
- கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் குன்னத்தூர் ஊராட்சி சென்னானூர் கிராமத்தில், புதிய கற்கால பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறியும் வகையில், தமிழக தொல்லியல் துறை சார்பில், தொல்லியல் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- இதில், மேற்குப் பகுதி மலையடிவாரத்தில் 10-வது அகழாய்வு குழிகள் தோண்டப்பட்டு, 327 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து அகழாய்வு இயக்குநர் பரந்தாமன் கூறியதாவது: சென்னானூர் கிராமத்தில் நடைபெற்று வரும் அகழாய்வில், கண்ணாடி வளையல் துண்டுகள், சங்கு வளையல் துண்டுகள், தக்ளிகள், வட்ட சில்லுகள், பானை வனை சில்லுகள், ஏர்கலப்பையின் இரும்பிலான கொழுமுனை, இரும்பிலான அம்பு முனைகள், ஈட்டி முனை, குவார்ட்ஸ் கல்மணி, சுடு மண்ணாலான முத்திரைகள், மணிகள், விளக்குகள் உள்ளிட்டவை கண்டறியப்பட்டு உள்ளன.
- சென்னானூர் அகழாய்வில் காலவரிசைப்படி நுண் கற்காலம், புதிய கற்காலம், புதிய கற்காலத்தில் இருந்து இரும்பு காலத்துக்கான மாற்றம் அடைந்த நிலை மற்றும் வரலாற்றுத் தொடக்கக் காலத்தின் நிலை ஆகியவை இக்குழியில் காணப்படும் மண் அடுக்கின் மூலம் அறிய முடிகிறது. இத்தொல்லியல் தளத்தின் உறுதியான காலத்தை அறிவியல் முறைப்படி அறிய மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டு உள்ளன.
- தென்பெண்ணையாற்றின் கிளை ஆறான பாம்பாறு, இத்தொல்லியல் மேட்டையொட்டி பயணித்துள்ளது. புதிய கற்காலத்தில் வேளாண்மை மேற்கொள்ளவும், ஆடு, மாடுகளை வளர்க்கவும் ஏற்ற இடமாக சென்னானூர் அமைந்துள்ளது.

## 50 சதவீதம் மாணவர்களுக்கு கல்வி வழங்க இந்தியாவில் 2,500 பல்கலைக்கழங்கள் வேண்டும் நிதி ஆயோக் சிஇஓ சுப்ரமணியம் தகவல்

- இந்தியாவில் தற்போது 1,200 பல்கலைக்கழகங்கள் உள்ளன. 4 கோடி மாணவர்கள் படித்து வருகின்றனர்.
- இந்த எண்ணிக்கை கல்லூரி படிக்கும் வயதினரில் 29 சதவீதம் மட்டுமே. 50 சதவீத பேர் கல்லூரி படிப்பில் இணைய வேண்டுமென்றால், நாட்டின் பல்கலைக்கழக எண்ணிக்கை 2,500 ஆக உயர வேண்டும்.

### 120 கோடி பேருக்கு வங்கி கணக்கு

- டிஜிட்டல் கட்டமைப்பில் இந்தியா முன்னுதாரண நாடாக உள்ளது. 140 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டில், 120 கோடி பேருக்கு வங்கிக் கணக்கு உள்ளது. இந்தியாவில் வலுவான டிஜிட்டல் கட்டமைப்பால் நம்மால் பல்வேறு விஷயங்களை பரிசோதித்துப் பார்க்க முடிகிறது.
- இந்தியாவின் யுபிஐ மிக முக்கியமான உருவாக்கம். இன்று உலக அளவில் நிகழும் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளில் 50 சதவீதம் இந்தியாவில் மேற்கொள்ளப்படுகிறது. மாதத்துக்கு 1,000 கோடி பரிவர்த்தனைகள் இங்கு நிகழ்கின்றன.

### 30 டிரில்லியன் டாலர்

- 2047-ம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் 30 டிரில்லியன் டாலராக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நவீன வளர்ந்த நாடாக மாற ஆய்வும் புதிய கண்டுப்பிடிப்புகளும் மிக முக்கியம் ஆகும். ஏஐ மற்றும் செமிகண்டக்டர் சார்ந்து மத்திய அரசின் முன்னெடுப்பு, நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்தும் என்று தெரிவித்தார்.